அனுப்புநர்

சி. நவமணி M.A,B.Ed.,
தலைமை ஆசிரியர்,
29/10C. ஜாகீர் உசேன் தெரு,
சேத்துப்பட்டு - 606801,
திருவண்ணாமலை மாவட்டம்,




RT. 2526218057JN

04/06/22

பெறுநர்

மதிப்புமிகு தகவல் வழங்கும் அலுவலர் அவர்கள் மற்றும்,
முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் அவர்கள்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்.

1839

06 JUN 2022

ஐயா,

பொருள் : தகவல் வழங்கும் உரிமைச் சட்டம் 2005 இன்படி,01.01.2002 ஆம் ஆண்டில் இடைநிலை ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர்களின் முன்னுரிமைப்பட்டியலின் படி, கணிதப் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிவோரின் விவரம் கோருதல் - சார்பாக.

தகவல் உரிமைச் சட்டம் - 2005 இன்படி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் 01.01.2002 இன் முன்னுரிமைப் பட்டியலின்படி, கணிதப்பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்கள் மட்டும் கீழ்க்கண்ட விவரங்களுக்குரிய பதிலினை வழங்கும்படி மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பெயர்: | |
| 2 | A - முதல் முதலில் இடைநிலை,சிறப்பு ஆசிரியராக அரசு உயர்/மேல் நிலைப்பள்ளிகளில் பணியேற்ற நாள் மற்றும் பள்ளியின் முகவரி.<br>B. முதல் முதலில் பஞ்சாயத்து யூனியன் துவக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டு பின்பு அரசு பள்ளிக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்ட நாள். | |
| 3 | இடைநிலை மற்றும் சிறப்பாசிரியர்கள் பணியில் பணி வரன்முறை செய்யத நாள் (பணி வரன்முறை ஆணையின் ந.க.எண் மற்றும் நாளினைக் குறிப்பிடுக). | |
| 4 | தகுதி காண் பருவம் முடித்த நாள் (இடைநிலை,சிறப்பாசிரியர் பணியில்) (தகுதி காண் பருவம் முடித்த நாளின் ஆணை எண் மற்றும் நாளினைக் குறிப்பிடுக). | |
| 5 | தேர்வு நிலை,சிறப்புநிலை பெற்ற நாள் | |
| 6 | 01.01.2002-ன் இடைநிலை,சிறப்பாசிரியர் முன்னுரிமை பட்டியலின் படி கணிதப் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற நாள் (பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி அவர்களின் செயல்முறை ஆணையின் ந.க.எண் நாளினைக் குறிப்பிடுக). | |
| 7 | கணிதப் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற பின்பு உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று இருப்பின் ஆணையின் எண் மற்றும் நாளினைக் குறிப்பிடுக மற்றும் தற்பொழுது பணியாற்றும் பள்ளியின் பெயரைக் குறிப்பிடுக. | |
| 8 | கணிதப் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற பின்பு முதுகலைப் பட்டதாரி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று இருப்பின் ஆணையின் ந.க.எண் மற்றும் நாளினைக் குறிப்பிடுக தற்போது பணிபுரியும் பள்ளியின் பெயரைக் குறிப்பிடுக. | |
| 9 | பதவி உயர்வு மூலம் கணிதப் பட்டதாரி ஆசிரியராகத் தற்பொழுது பணிபுரியும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினைக் குறிப்பிடுக. | |

மேற்கண்ட விவரங்களுக்குரிய பதிலை தகவல் உரிமைச் சட்டம் 2005ன் வாயிலாகப் பெற விரும்புகிறேன். இதற்கான செலவினை அரசுக் கணக்கில் செலுத்த தயாராக உள்ளேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,

சி.நவமணி
3.6.2022

இடம் : சேத்துப்பட்டு
நாள் : 03.06.2022